**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, FAST TRACK MAHILA COURT, THANJAVUR.

**SC. No - 143/2018**

**Prosecution PW - 8**

| | | | |
|---|---|---|---|
| Name | டாக்டர். காயத்திரி | Occupation | |
| Husband's Name | | Village | |
| Age | | Taluk | |
| Date | 07.08.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
**( A1 Ramu present. A2 Vairmani and A3 Rajammal not present and petition filed and allowed.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது திருவோணம் வட்டார மருத்துவமனையில் வட்டார மருவத்துவராக கடந்த 4 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.09.2014 அம் ஆண்டு பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது மாலை 04.30 மணிக்கு மதுக்கூர் காவல் நிலைய குற்ற எண் 244/2014, ச.பி 174 கு.வி.மு.சா என்ற வழக்கில் இறந்து போன சிவகாமி என்பவரது பிரேதத்தை தலைமை காவலர் 898 பன்னீர் செல்வம் என்பவர் வேண்டுக்கோள் கடிதத்துடன் 12.25 மணிக்கு பிரேதத்துடன் ஆஜர் செய்ததை பெற்று மாலை 4.30 மணிக்கு பிரேதத்தை நானும் மருத்துவர் காசிவிஸ்வநாதன் என்பவரும் சேர்ந்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு எடுத்துக் கொண்டோம். பிரேதத்தின் கண்கள் மூடியிருந்தது. நாக்கு வெளியில் தள்ளப்பட்டிருந்தது. மூக்கில் இருந்து திரவம் வெளியேறி உள்ளது. கை மற்றும் கால்கள் விரைப்பு தன்மையுடன் காணப்பப்பட்டது. கழுத்து பகுதியில் Hanging Mark-ஆனது 2.5x5 c.m அளவில் இருந்தது. இந்த அளவாளனது வலது காதுக்கு கீழ் 5c.m அளவிலும், இடது காதுக்கு கீழ் 7 c.m அளவிலும் உள்ள பகுதியில் இருந்தது. முதுகுப்பக்கம் அழுந்தி( Superficial Impression) இருந்தது. வயிற்று பகுதியில் பாதி செரித்த உணவு காணப்பட்டது. இடது பக்கத்தில் Hyoid Bone உடைந்த நிலையில் காணப்பட்டது. கல்லீரல், இதயம் சிவந்து காணப்பப்பட்டது. சிறுநீரகம் சிவந்து காணப்பட்டது. மூளை மற்றும் குடல் பகுதி நல்ல நிலையில் காணப்பட்டது. பிறப்புறுப்பு நல்ல நிலையில் காணப்பட்டது. உடல் உள்ளுறுப்புகள் இராசயன பரிசோதனைக்காக

அனுப்பப்பட்டது. அதில் விஷம் ஏதுவும் இல்லை என்று இரசாயன அறிக்கை பெறப்பட்டது. மேற்சொன்ன நபர் Hanging due to Asphyxia னால் இறந்திருக்க கூடும் என்று பிரேத கூராய்வு அறிக்கை வழங்கினோம். அந்த பிரேத கூராய்வு அறிக்கை அ.த.சா.ஆ.**3** ஆகும். Visera Report அ.த.சா.ஆ **4** ஆகும். பிரேத கூராய்வு 4.30 மணிக்கு துவங்கி 5.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்சொன்ன நபர் பிரேத கூராய்வுக்கு முன்னர் 12 மணி நேரத்திற்குள் இறந்திருக்க கூடும். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

பிரேத கூராய்வு அறிக்கையை நான் தான் என் கைப்பட எழுதினேன். பிரேத கூராய்வு வேண்டுகோள் எந்த அதிகாரி எனக்கு கொடுத்தார் என்றால் தற்சமயம் எனக்கு ஞபாகம் இல்லை. அந்த வேண்டுகோள் கடித்தை பிரேத கூராய்வு அறிக்கையுடன் நான் திருப்பி கொடுத்துவிட்டேன். மேற்சொன்ன பிரேதமானது நல்ல திடகாத்திரமான உடல் அமைப்புடன் உள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன நபர் பிரேத கூராய்வுக்கு முன்னர் 12 மணி நேரத்திற்குள் இறந்திருக்க கூடும் என்பதை பிரேத கூராய்வு அறிக்கையில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரேத கூராய்வு வேண்டுகோள் கடிதத்துடன் பிரேத விசாரணை அறிக்கை ஏதேனும் எனக்கு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. கால் துறையினர் என்னை விசாரிக்கும் போது Inquest Report ல் உள்ள காயங்களுக்கும் நான் பிரேத கூராய்வு அறிக்கையில் குறிப்பட்டுள்ள காயங்களுக்கும் உள்ளான முரண்பாடுகள் உள்ளன என்று கூறி விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன நபரின் பிரேத விசாரணை வேண்டுகோள் கடிதத்ததுடன் இறப்பிற்கான காரணம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது, அவர் தூக்கு மாட்டி இறந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. எதை பயன்படுத்தி மேற்சொன்ன நபர் தூக்கு மாட்டி கொண்டார் என்பதை காட்டி போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. அரை செரித்த உணவை வைத்து மேற்சொன்ன நபர் எத்தனை மணிக்கு இறந்திருக்ககூடும் என்பதை கண்டறிய வேதியல் ஆய்வறிக்கைக்கு வேண்டுகோள் கடிதம் வைத்தேனா என்றால் இல்லை. அவ்வாறு வேதியியல் ஆய்வறிக்கைக்கு மேற்சொன்ன உணவை

அனுப்பி இருந்தால் அந்த நபர் பிரேத கூராய்விற்கு முன்னர் 12 மணி நேரத்திற்குள் இறக்கவில்லை என்று தெரிந்துவிடும் என்பதால் அந்த ஆய்வறிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. போலிசார் எதனால் மேற்சொன்ன நபருக்கு Hanging Mark ஏற்பட்டுள்ளது என்பதை குறித்து என்னை விசாரிக்கவில்லை. எதனால் Hyoid Bone Fracture ஆனது குறித்து போலிசார் என்னை விசாரிக்கவில்லை. Hyoid Bone Fractureனால் மூச்சு தினறல் ஏற்படி வாய்புண்டு என்றால் சரிதான்.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒம்/- ஜே. தமிழரசி,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
விரைவு மகிளா நீதிமன்றம்,
தஞ்சாவூர்.(மு.கூ.பொ)